**TNEB**
**எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**

மலர்- 4 ✧ இதழ்-11 ✧ ஜுலை 2022

நிர்வாக ஆசிரியர்
**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு
**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**S. இராமநாதன்**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**வீ. பாரதி**

செயலாளர் (வெளியீடு)
**A. செந்தில்குமார்**

39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com

# 2022, ஆகஸ்ட் 8 : வீரமிக்க போராட்டமே, வெற்றியின் வரலாறு!

**2022,** ஆகஸ்ட் 8 மின்சாரத் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் யாவரும் போர்க்கொடி ஏந்தி புறப்பட்ட நாள். ஒன்றிய அரசு ஆகஸ்ட் 8ம் தேதி மின்சார சட்ட திருத்த மசோதா 2022ஐ தாக்கல் செய்ய இருப்பதை தடுப்பதற்கான முயற்சிக்கு திட்டமிட்டு NCCOEEE நாடு முழுவதும் போராட்டத்தை முடுக்கி விட்ட நிலையில் மிகப் பெரிய வெற்றிகள் பெற்றிருக்கிறோம்.

பாராளுமன்றத்திற்கு வெளியே இந்திய தேசம் முழுவதும் அனைத்து மாநிலங்களிலும் மிகப் பிரம்மாண்டமாகப் போராட்டம் காலை 8.00 மணிக்கு ஆரம்பித்து தொடர்ந்திருந்த நேரம்,

பாராளுமன்றம் கூடியபின் மின்சார சட்ட திருத்த மசோதா 2022ஐ தாக்கல் செய்து உரையாற்ற முனைந்த ஒன்றிய எரிசக்தித் துறை அமைச்சர் திரு. R.K. சிங் அவர்களை தி.மு.க. உள்ளிட்ட பாராளுமன்ற எதிர்கட்சி உறுப்பினர்கள், கடுமையாக எதிர்த்து ஆட்சேபணையை தெரிவித்ததின் விளைவாக நிலைக்குழுவுக்கு அனுப்ப வேண்டிய நிர்பந்தம் ஒன்றிய அரசுக்கு ஏற்பட்டது என்பதை மறந்துவிட முடியாது.

மக்களுக்கான சேவைத் துறையை தனியார் மயமாக்கத் துடிக்கும் எதேச்சதிகாரமான போக்கை மாற்றிட பாராளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் பலமான எதிர்க்கும் போராட்டம் நடந்துள்ளது. இதனால் ஒன்றிய அரசு அடிபணிந்திருக்கிறது. அதோடு மட்டுமல்ல, 12ம் தேதி வரை நடைபெற இருந்த பாராளுமன்ற கூடத்தையும் நான்கு நாட்கள் முன்னதாக முடக்கிக் கொண்டது.

மின்சார சட்ட திருத்தம் 2021ஐ பாராளுமன்றத்தில் எப்படி தாக்கல் செய்ய விடாமல் தகர்த்தெரிந்தோமோ அதே

வரலாறுதான் மீண்டும் நிரூபணம் ஆகியிருக்கிறது. தமிழக மின்சார வாரியத்தில் பணியாற்றுபவர்கள் களத்தில் போராடி பலத்தை நிரூபித்த அனைவருக்கும் வாழ்த்துகளையும், நன்றிகளையும் உரித்தாக்குவோம். குறிப்பாக தமிழக அரசு இப்போராட்த்திற்கு ஆதரவு நிலை எடுத்ததிற்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழக மின்சாரவாரியத்திற்குட்பட்ட பிரச்சனைகளை பேசி முடிக்க தவறிய வாரியத்தின் போக்கை கண்டித்து கூட்டுநடவடிக்கை குழுவின் சார்பாக அறிவிக்கப்பட்ட ஜூன் 20 காத்திருப்பு போராட்டம் அரசின் தலையீட்டால் அமைச்சர் முன் பேச்சுவார்த்தை நடைபெற்றதால் தற்காலிகமாக ஒத்தி வைத்திருப்பதை நாம் அறிவோம். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடன் இரு தினங்களுக்குள் கலந்து பேசி முக்கியமான ஊதிய உயர்வு மற்றும் இதர கோரிக்கைகள் குறித்து முடிவு அறிவிப்பதாக அமைச்சர் உறுதியளித்தார். சமூக ஊடகங்களில் மின்சாரத் தொழிலாளர்கள் இரண்டு நாள் வரை இன்னும் எத்தனை நாட்கள் இருக்கிறது என்று எழுதுகிற செய்தி நாட்டில் யார் பார்வைக்கும் வராமலிருக்க வாய்ப்பில்லை. இருந்த போதிலும் ஊதிய உயர்வுக்கு குழு அமைக்கப்படும் என்று ஊடகத்தில் செய்தியை பகிர்ந்துள்ளதைக் காண முடிந்தது.

ஜூன் 2, நமது வேலை நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தை மூன்று கட்டம் நகர்ந்து முடிந்திருக்கிறது. அடுத்து ஆகஸ்ட் 12ல் என்ன முடிவு சொல்கிறார்கள் என பார்ப்போம்!

மின்சார வாரிய வளாகத்தில் மின்வாரியம் ஒதுக்கியுள்ள சங்க மனை திறப்பு விழா 22.08.2022ல் நடைபெற உள்ளது. நமக்கு மகிழ்ச்சி அளிக்கும் நிகழ்வாக, மின்வாரியத் தலைவர் அவர்களால் அலுவலகம் காலை 10.30 மணிக்கு திறந்து வைக்கப்பட உள்ளது.

இரட்டை கோபுரம் தாங்கிய நமது செங்கொடி காலை 10.00 மணிக்கு வாரிய வளாகம் முன் பட்டொளி வீசி பறந்திட உள்ளது.

தொழிலாளர் வர்க்க சிந்தனையை சிரமேற்றும் நிகழ்வாக குருதியில் தோய்ந்த தொழிற்சங்க வீரமிக்க போராட்டங்களை நினைவு கூறும் வகையில் தோழர்கள் குருதி தானம் செய்திட உள்ளார்கள். பாரதத்தின் விடிவெள்ளியாகத் திகழ்ந்த அமரர் இராஜீவ் காந்தியின் பெயரைத் தாங்கிய அரசினர் மருத்துவமனைக்கு குருதிக் கொடையை வழங்கிட இருக்கிறோம்.

**சந்திப்போம்! சிந்திப்போம்! ஆகஸ்ட் 21 சென்னை செயற்குழுவில் அடுத்தக்கட்ட நடவடிக்கைக்கான முடிவுகளை எடுத்திடுவோம்!**

***- ஆசிரியர்***

# மின்சார வாரிய வளாகத்தில் சங்கமனை திறப்பு விழா!




**2022, ஆகஸ்ட் 22, திங்கட்கிழமை**

**காலை 10.00 மணி**

வாரிய வளாகம் முன்
TNEBEF கொடியேற்று விழா

**காலை 10.30 மணி**

வாரிய வளாகத்தில் சங்கமனை திறப்பு விழா
மற்றும் இரத்ததானம் முகாம்



**சிறப்பு விருந்தினர்**

**திருமிகு ராஜேஷ்லக்கானி, IAS.,**
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்
TANGEDCO

## வாழ்த்துகிறோம்!

*2022, ஆகஸ்ட் 12, 13, 14 தேதிகளில்*

சென்னை பெரியார் திடலில் நடைபெறும்

**தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின்**

**17வது மாநில மாநாடு**

சிறப்படையவும், மாநாட்டில் நிறைவேற்றப்படும்

தீர்மானங்கள் வெற்றிப் பெறவும்

சகோதர தொழிற்சங்கமாக வாழ்த்துகளை

உரித்தாக்குகிறோம்.

- **ஆசிரியர்**





## எழுந்து வா தோழனே!

R. சிவப்பிரகாஷ், B.E
பொருளாளர், கோவை வடக்கு

சங்கம் என்று வந்தாய்
சந்தா தந்து போனாய்!
எல்லாமே சங்கம் என்றாய்
எழுந்து வர மறுத்தாய்!
சங்கம் என்ன செய்தது
கேள்வி மட்டும் கேட்கிறாய்!
வேலை நிறுத்தம் என்று சொன்னால்
ஓடி ஒளிந்து நிற்கிறாய்!
குன்றி கிடக்கும் உள்ளம்
குமுறி கொண்டு எழுமோ!
அனைத்தும் இழந்து நின்றாய்
அழைத்தும் வர மறந்தாய்!
தலையில் பணி சுமையோ
தலை நிமிர்ந்தால் சுகமே!
கேள்வி கேட்க துணிவில்லை
கேட்டு வாங்க மனமில்லை!
நாவில் பேச்சு வரவில்லை
நாணி கிடந்தால் வீரமில்லை!
துணிந்து நிற்க வா என்றோம்
துவண்டு கிடந்து தவழ்கின்றாய்!
வேலை பளு என்று மட்டும் புலம்பல்
வேலை நிறுத்தம் என்றால் மட்டும் நழுவல்
பயமறியா சங்கம் இருக்கு தெரியுமா
பயம் மறந்து எழுந்து நீயும் ஓடி வா!
போராட்டம் வெற்றி தரும் தெரியுமா
போராட உரிமையுண்டு எழுந்து வா!
உனக்குள் வீரம் உண்டு என்று அறிவாயா!
வீறுகொண்டு எழுந்து நீயும் ஓடி வா!
துணிவதற்கும் துணிவு வேண்டும் தெரியுமா
எம்ப்ளாயீஸ் பெடரேஷன் இருக்கு துணிந்து வா!
நன்மை செய்யும் சங்கம் என்று ஒன்று உண்டு
அதற்கு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் என்ற பெயர் உண்டு
உரிமை காக்க எழுந்து நீயும் ஓடி வா
உன்னை காக்க சங்கம் இருக்கு விரைந்து வா

# பெடரேஷனின் கடிதம்

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : திரு. A. தாவீது - மின்பாதை ஆய்வாளர் - கிருஷ்ணகிரி மின்திட்டம் - ஊர் மாறுதல் - விண்ணப்பம் - தொடர்பாக.**

திரு. A. தாவீது மின்பாதை ஆய்வாளராக அரசனபட்டி பிரிவு அலுவலகம் கிருஷ்ணகிரி மின்திட்டத்தில் பணி செய்து வருகிறார். கடந்த 2.07.2022ல் ஓசூர் கோட்டத்திற்குட்பட்ட அத்திமுகம் பிரிவிற்கு ஊர் மாறுதல் உரிய முறையாக இணைய வழியில் விண்ணப்பித்துள்ளார்.

கடந்த 05.07.2022ல் உதவி பொறியாளர்/ அரசனபட்டி அலுவலக வழியாக உரிய நகல் அனைத்தும் செயற்பொறியாளர்/ ஓசூர் கோட்டத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலை 25.07.2022 அன்று உதவி நிர்வாக அலுவலர்/ ஓசூர் கையொப்பமிட்ட தகவலில் திரு. A. தாவீது மின்பாதையாளர் தனது விண்ணப்பத்தினை 04.07.2022ல் இணைய வழியில் திரும்ப பெற்றுவிட்டதாக எழுத்து பூர்வமாக தந்துள்ளார். இதுகுறித்து செயற்பொறியாளரிடம் எங்கள் நிர்வாகிகள் பேசியபோது திரு. A. தாவீது மின்பாதை ஆய்வாளர் தான் விண்ணப்பத்தை ரத்து செய்யவில்லை என்றும் நிர்வாகப் பணியில் உள்ளவர்கள் வேண்டுமென்றே செய்துள்ளனர் என்றும் இக்கோட்டத்தில் களத்தொழிலாளர்களுக்கு பிறந்த தேதி அல்லது பொது வைப்பு நிதி கணக்கு எண்ணை இணைய வழியில் விண்ணப்பிக்க ID & Password ஆக உபயோகிப்பதால் தொழிலாளர்களின் விவரங்களை பராமரிக்கும் நிர்வாகப் பிரிவில்தான் இந்த தவறு செய்துள்ளார்கள் என்றும் கூறியுள்ளார்கள்.

இந்நிலையில் செயற்பொறியாளருக்கு இவ்விவரங்கள் அடங்கிய கடிதம் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் பொதுச் செயலாளர் அளித்திருந்தும் எந்தவித மேல் நடவடிக்கையும் எடுக்காததுடன் எங்களது நிர்வாகிகள் செயற்பொறியாளரை சந்திக்க சென்ற போது உட்கார இருக்கை அளிக்காமலும், ஒருமையில் அனைவரையும் திட்டியும், வெளியே போ என்றும் சத்தமிட்டுள்ளதாக கூறியுள்ளார்கள்.

திரு. A. தாவீது மின்பாதை ஆய்வாளர் எம்ப்ளாயீஸ் பெடஷேனின் கிருஷ்ணகிரி மின்திட்ட செயலாளராகவும் மாநில செயலாளர்களில் ஒருவராகவும் இருந்து வருகிறார். தொழிலாளர்களுக்கு உதவிகள் செய்து வரும் செயலாளர் பொறுப்பில் உள்ளவர்களை விண்ணப்பித்த அவர் திரும்ப பெற்றுக் கொண்டுள்ளார் என்று நிர்வாக ரீதியாக எழுத்து பூர்வமாகத் தந்திருப்பது தொழிற்சங்க செயல்பாட்டினை முடக்கும் செயலாக தெரிவதுடன், ஒரு செயலாளர் பொறுப்பில் உள்ளவர் விருப்ப மனுவை திரும்ப பெற்றிருந்தால் ஊர் மாறுதல் ஏன் போடவில்லை என கேட்டு 25ந் தேதி வந்து கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால் திரு. A. தாவீது விண்ணப்பத்தை யாரோ உள்நோக்கத்துடன் மற்றவர்களுக்கு சலுகை செய்வதற்காக நிர்வாகப் பணியில் உள்ளவர்கள் தவறு செய்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

எனவே, தலைவர் அவர்கள் மேற்கண்ட பிரச்சினையில் செயற்பொறியாளர் / ஓசூர் அவர்களிடம் அலுவலக செயல்பாடு குறித்து தகுந்த விசாரணை மேற்கொண்டு திரு. A. தாவீது மின்பாதை ஆய்வாளருக்கு அரசனபட்டி பிரிவிலிருந்து அத்திமுகம் பிரிவிற்கு ஊர் மாறுதல் செய்திட உத்திரவிட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

# ஊதியத்தில் சந்தா, நன்கொடை பிடித்தம் தொடர்பான உத்தரவு

Secretariat Branch
N.P.K.R.R. Maaligai,
144, Anna Salai, Chennai-2.

**Memo. (Per.) No. 18132/A16/A161/2022-1, Dated : 27.06.2022**

Sub : TANGEDCO - Union - Streamline of deduction of Annual subscription from the salary of the willing members of Unions - Reiterated - Orders - Issued.

Ref :
1. (Per) B.P (Ch) No. 77 (SB), dt. 28.03.2007.
2. (Per.) B.P. (Ch) No. 111, (SB) dated 09.05.2007
3. Secretariat Branch, Memo. (Per) No. 39962/A3/A31/2020-1, dated : 18.11.2020.
4. Secretariat Branch, Memo. (Per) No. 43915/A3/A31/2020-1, dated : 04.02.2021.
5. Secretariat Branch, Memo. (Per) No. 43915/A3/A31/2020-4, dated: 10.08.2021.

*****

In the Boards Proceedings first cited, orders were issued for deduction of Annual Subscription and Donation from the salary of the willing employees of the Unions/Association, who make the specific request before the Board in this regard. In the standard terms and conditions annexed to the Board Proceedings second cited, it has been ordered that subscription shall be deducted from the pay bill for May payable in June and donation shall be deducted from the pay bill for November payable in December every year.

2. In the reference third cited, orders were issued for cancellation/dispensation of the scheme of deduction of Annual Union Subscription/Donation from the salary of the willing employees of the TANGEDCO and also ordered to cancel the Board's Proceedings first and second cited with immediate effect.

3. In the reference fourth cited, orders were issued reviving the scheme of deduction of Annual Subscription from the salary of the willing members of their unions and the members shall submit their willingness for deduction to only one membership fee. In the reference fifth cited, while reconsidering the cancellation order of deduction of Union.

4. Therefore, it is hereby reiterated that the orders issued in the reference fifth cited prescribing the validity limit of 3 years of the willingnness for recovery of annual Subscription/ Donation be strictly adhered to and the Pay Drawing Officers are hereby directed that the Subscription/Donation shall be deducted only after obtaining of the willingness letter from the employee concerned and not based on the list submitted by the Unions/Association.

5. The receipt of the Memo. (Per) shall be acknowledged.

**A. MANIKKANNAN**, Secretary

# TNEB DRAUGHTSMEN UNION - OFFICE BEARERS LIST

| | | |
|---|---|---|
| ***President*** | : | **Thiru. A. Paranthaman**, CHD/G.C.C.2/Chennai |
| ***General Secretary*** | : | **Thirumathi M. Mangayarkarasi** M.A., B.Ed., DCE |
| ***Treasurer*** | : | **Thiru D. Prakash,** HD/PD&C/Chennai |
| ***Working President*** | : | **Thiru. M. Kamalanathan,** Chief Head Draughtsman (Rtd)/Chennai |
| ***Organising Secretary*** | : | **Thiru. P. Hemachandrababu**, Chief Head Draughtsman (Rtd)/Chennai |
| ***Vice Presidents*** | : | **Thiru. D.S. Nagore Gani**, CHD/Valathur Gass Turbine/Ramnad |
| | : | **Thiru. M. Maheen,**CHD/\|Kothaiyar PH/Thirunelveli |
| : | | **Thirumathi. M. Suguna**, CHD/Erode EDC/Erode |
| *Deputy General Secretaries:* | | **Thiru. N. Soundararajan,** CHD/TTPS/Tuticorin |
| : | | **Thiru. K. Lakshmanan**, CHD/Dindigul EDC/Dingidual |
| : | | **Thiru. M.R. Kasi**, CHD/Salem EDC/Salem |
| ***Joint Secretary (Office):*** | | **Thirumathi M. Aruna**, HD/Transmission/Chennai |
| ***Joint Secretaries*** | : | **Thirumathi. A. Uma Maheswari**, CHD/Perambalur EDC/Perambalur |
| | : | **Thirumathi. C. Dhanalakshmi**, CHD/Kadamparai Generation Circle |
| | : | **Thiru. S. Dhandayudhabani**, HD/Kancheepuram EDC |
| | : | **Thiru. L. Manikandan,** HD/Thirunelveli EDC |
| | : | **Thiru. P. Janakiraman**, HD/Chennai/EDC South-1 |
| | : | **Thirumathi. D. Nalini Ananth**, CHD/Coimbatore EDC North |
| | : | **Thirumathi. R. Sumathi**, CHD/Chennai EDC West |
| | : | **Thiru. C. Uvarajan**, CHD/Vellore EDC/Vellore |
| | : | **Thirumathi. N. Lalitha**, CHD/Thirunelveli EDC |
| | : | **Thiru. R. Shanmugam**, CHD/Trichy EDC/Trichi |
| | : | **Thirumathi. D. Vimala**, CHD/Cuddalore EDC |
| | : | **Thiru. B. Chakkrabani**, HD/Thiruvannamalai EDC |
| | : | **Thiru. B. Balaji**, HD/Mettur Workshop/Mettur Dam |
| | : | **Thirumathi. P. Jayakumari**, HD/Kanniyakumari/EDC |
| | : | **Thiru. S. Naraynan**, Sr. Draughtsman/Chennai Central |
| | : | **Thiru. S. Kasirajan**, Sr. Draughtsman/Ramnad EDC |
| | : | **Thiru. A. Eswaran**, HD/Thirunelveli Generation |
| | : | **Thiru. M. Nagarajan,** Sr. Draughtsman/Madurai GCC |
| | : | **Thiru. M. Balakrishnan**, HD/PD&C/Chennai |
| | : | **Thirumathi. G. Bhavani**, Sr. Draughtsman/CDC/Chennai |
| ***Chief Advisor*** | : | **Thiru. A. Kannadurai,** AEE (Rtd) / Coimbatore ● |

## பறைபட வாழா அசுணமா!

**பறைபட வாழா அசுணமா; உள்ளம்**
**குறைபட வாழார் உரவோர் - நிறைவனத்து**
**நெல்பட்ட கண்ணே வெதிர்சாம தனக்கொவ்வா**
**சொல்பட்டால் சாவதாம் சால்பு!**

**கருத்துரை**

அசுணமா என்னும் கேகயப் பறவைக்கு பறையொலி பிடிக்காது; பறையொலியைக் கேட்டால் அஃது உயிர் நீத்துவிடும்!

அறிவார்ந்த மக்கள் தமது மதிப்புக்கு மாசு நேர்வதை விரும்பமாட்டார்; நேர்ந்தால் உயிர் வாழத் துணியார்!

மூங்கில் தூர்களில் அதன் வாணாளில் ஒருமுறைதான் அரிசி விளையும்; விளைந்த பின் அவை உயிர் வாழாது பட்டுப் போகும்!

அதுபோல், நிறையுடைய சான்றோர் தம்மீது பழிச்சொல் ஏற்படுவதைப் பொறுக்கமாட்டார்; ஏற்பட்டால் அக்கணமே உயிர் துறப்பர்!

**அருஞ்சொற்பொருள்:**

அசுணமா = கேகயப் பறவைகள் (இதை மயில் என்கின்றனர் சிலர்) பறைபட வாழா = பறையின் ஓசை தம் செவியிற்பட்டால் உயிர் வாழமாட்டா; உரவோர் = அறிவுடையோர்; உள்ளம் குறைபட வாழார் = தமது பெருநிலை குறைபட்டால், உயிர் தாங்கமாட்டார்; நிறைவனத்து = மரங்க நிறைந்த காட்டிலுள்ள; வெதிர் = மூங்கில்; நெல்பட்ட கண்ணே = அகவை முதிர்ந்து நெல் விளையும் காலத்தில் சாம் = பட்டுப்போகும்; சால்பு = நிறையுடைய சான்றோர்; தனக்கு ஒவ்வாச் சொல்பட வாழாது = தமது நிறைவுக்குக் குறைவான இழிவுரைகள் உண்டானால் உயிர் வாழமாட்டார்.

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்''**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**
**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**
39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com

***குறிப்பு :*** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*



# அத்தியாயம் - 10

தொடர்ச்சி

# பொது ஊழியர்களின் சட்டப்பூர்வமான அதிகாரத்தை அவமதித்தல் பற்றி...

வழக்கறிஞர் **தேவிபாலா குணசேகரன்**, M.A., B.L.,

**பிரிவு - 174 (Section - 174)**

பொது ஊழியரால் பிறப்பிக்கப்பட்ட சட்டப்பூர்வ அழைப்பாணை, அறிவிப்பு, கட்டளை அல்லது பகிரங்க அறிக்கைக்குக் கீழ்ப்படிந்து, நேரில் அல்லது முகவர் மூலம் குறிப்பிட்ட நேரத்திலும் இடத்திலும் சட்டப்படி முன்னிலையாகக் கட்டுப்பட்ட எவரொருவரும், உட்கருத்தோடு அந்த இடத்தில் அல்லது நேரத்தில் முன்னிலையாகாமல் இருந்துவிட்டால் அல்லது அவர் முன்னிலையாகக் கட்டுப்பட்ட இடத்திலிருந்து சட்டப்படி அவர் புறப்படக்கூடிய நேரத்திற்கு முன்பே புறப்பட்டு விட்டால், ஒரு மாத மெய்க்காவல் தண்டனை அல்லது ஐநூறு ரூபாய் அபராதம் அல்லது இரண்டுமோ, அல்லது அந்த அழைப்பாணை, அறிவிப்பு, கட்டளை அலல்து பகிரங்க அறிக்கை ஒரு நீதிமன்றத்தில் நேரில் அல்லது பிரதிநிதி மூலம் முன்னிலையாதற்காயின், ஆறுமாத கால மெய்க்காவல் தண்டனையோ அல்லது ஆயிரம் ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**பிரிவு 175 (Section 175)**

ஆவணம் அல்லது பத்திரம் அல்லது மின்னணுப் பதிவுருவைச் சட்டப்படி பொது ஊழியரிடம் கொண்டு வந்து ஒப்படைக்கக் கட்டுப்பட்டிருந்தது. உட்கருத்தோடு ஒப்படைக்காது விட்டு விடுகிற ஒருவர் ஒரு மாத கால மெய்க்காவல் தண்டனையோ அல்லது 500 ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும். அதேவிதமான ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கக் கட்டுப்பட்டிருந்து, ஒப்படைக்க விட்டுவிட்டால் ஆறுமாத கால மெய்க்காவல் தண்டனையோ அல்லது ஆயிரம் ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**பிரிவு 176 (Section 176)**

பொது ஊழியருக்கு, ஒரு பொருளையப் பற்றிய அறிவிப்பு அல்லது தகவல் கொடுப்பதற்குக் கட்டுப்பட்டவர், உட்கருத்தோடு தகவல் கொடுக்காமல் விடுக்கும் நபருக்கு, ஒரு மாத மெய்க்காவல் தண்டனை அல்லது ஐநூறு ரூபாய் அபராதம் அல்லது இரண்டுமோ, அல்லது அந்தத் தகவல் ஒரு

குற்றச் செயல் செய்வது பற்றியோ, குற்றத்தைத் தடுப்பதற்கோ, குற்றவாளியைக் கைது செய்வதற்கானதாகவோ, தேவைப்பட்டதாக இருப்பின், ஆறுமாத கால மெய்க்காவல் தண்டனையோ அல்லது ஆயிரம் ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**பிரிவு 177 (Section 177)**

பொது ஊழியருக்கு, ஒரு பொருளைப் பற்றிய அறிவிப்பு அல்லது தகவல் கொடுப்பதற்குக் கட்டுப்பட்டவர், உட்கருத்தோடு பொய்யான தகவல் என்று அறிந்தே மெய்யானது என்று கொடுக்கும் நபருக்கு, ஆறு மாத கால மெய்க்காவல் தண்டனையோ அல்லது 1000 ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும். அந்தத் தகவல் ஒரு குற்றச் செயல் செய்வது பற்றியோ, குற்றத்தைத் தடுப்பதற்கோ, குற்றவாளியைக் கைது செய்வதற்கானதாகவா, தேவைப்பட்டதாக இருப்பின், இரண்டு ஆண்டுகள் கால சிறை தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**பிரிவு 178 (Section 178)**

மெய்யுறுதி அல்லது ஆணை உறுதிமொழி எடுத்துக் கொள்வதன் மூலம் உண்மை கூறுவதற்கு. தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள பொது ஊழியரால் கோரப்படும்போது, அதனை மாறுக்கின்ற எவரும், ஆறு மாத கால மெய்க்காவல் தண்டனையோ அல்லது 1000 ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**பிரிவு 179 (Section 179)**

பொது ஊழியர் எவரிடமேனும் எந்த விசயத்திலேனும் உண்மையை உரைக்கச் சட்டப்படிக் கட்டுப்பட்டவர், தம்மிடம் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல மறுக்கும் எவரும், ஆறு மாத கால மெய்க்காவல் தண்டனையோ அல்லது 1000 ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**பிரிவு 180 (Section 180)**

தம்மால் கொடுக்கப்பட்ட உரை எதிலும் கையொப்பமிட, அதில் கையொப்பமிடும்படி பொது ஊழியரால் கோரப்படும்போது, அதனை மாறுக்கின்ற எவரும், மூன்று மாத கால மெய்க்காவல் தண்டனையோ அல்லது 500 ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமரோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**பிரிவு 181 (Section 181)**

பொது ஊழியரிடம் அல்லது மெய்யுறுதி, ஆணை உறுதிமொழியைச் செய்து வைக்கச் சட்டத்தால் அதிகாரம் பெற்றுள்ள எந்தப் பொது ஊழியரிடமும், பொய்யான உரையை அல்லது உறுதிமொழிக் கொடுக்கின்ற எவரொருவரும் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**பிரிவு 182 (Section 182)**

மற்றொருவருக்குக் கேடு விளைவிக்க அல்லது விளைவிக்கும் என்று அறிந்தே, பொது ஊழியர் ஒருவரின் சட்டப்படியான அதிகாரத்தைப் பயன்படுத்தும்படி உட்கருத்துடன், பொய்த்தகவல்

கொடுக்கும் நபருக்கு, ஆறு மாத காலச் சிறைத் தண்டனையோ அல்லது 1000 ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**பிரிவு 183 (Section 183)**

சட்டப்பூர்வ அதிகாரத்தின்படி சொத்தினை எடுக்கும் (கைப்பற்றும்) பொது ஊழியரைத் தடை செய்யும் எவரும், ஆறு மாத காலச் சிறைத் தண்டனையோ அல்லது 1000 ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**பிரிவு 184 (Section 184)**

சட்டப்படியான அதிகாரத்தின் பேரில், விற்பனைக்கிடப்பட்ட சொத்தின் விற்பனையைப் பொது ஊழியர் செய்யும்போது, அதனை உட்கருத்தோடுத் தடுக்கும் எவரும், ஒரு மாத காலச் சிறைத் தண்டனையோ அல்லது 500 ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**பிரிவு 185 (Section 185)**

பொது ஊழியரின் அதிகாரத்தினால், விற்பனைக்கு இடப்பட்ட சொத்தினைச் சட்டத்திற்கு முரணான வகையில் வாங்குதல் அல்லது ஏலங்கேட்டல் என்பது, ஒரு மாத காலச் சிறைத் தண்டனையோ அல்லது 200 ரூபாய் அபராதாமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கக் குற்றச் செயலாகும்.

**(தொடரும்)**



# மாம்பழ நகரம் (சேலம்) மண்ணில் ஒரு வெற்றிப் பயணம்

**V. சிவராணி**
மாநில இணைச் செயலாளர்
மகளிரணி

**கா**ட்சிகளை அப்படியே கண்முன்னே பிம்பங்களாக நினைவிற்கு கொண்டு வந்து இந்த கட்டுரையை எழுதுகிறேன்.

பெரியார் மண்ணில் பெண் பணியாளர்கள சந்தித்த பயணத்தை தொடர்ந்து மாம்பழம் நகரமாம் சேலம் மண்ணில் தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் அமைப்பின் பெண் நிர்வாகிகள் கோவை மண்டலத்திலிருந்து திருமதி. M. பாரதி, மாநில மகளிரணி செயலாளர், (நிர்வாக மேற்பார்வையாளர்), தலைமை அலுவலகம், கோவை, திருமதி. B. இந்து, (நிர்வாக உதவியாளர்), தலைமை அலுவலகம், கோவை திருமதி. M. ஜோஸ்பின்ராணி மாநில மகளிரணி

இணைச்செயலாளர், (கணக்கு உதவியாளர்), கோவை தெற்கு வட்டம், திருமதி. M.C. சந்திரிகா (அலுவலக உதவியாளர்), கோவை வடக்கு வட்டம் மற்றும் சேலம் வட்டத்திலிருந்து திருமதி. வ. சிவராணி, மாநில மகளிரணி இணைச் செயலாளர் (வணிக உதவியாளர்), திருமதி. M. ரேணுகா, (கணக்கீட்டாளர்), K. கிருஷ்ணவேணி, (கணக்கீட்டாளர்), செல்வி. N. ரோஜா, (கணக்கு உதவியாளர்) திருமதி. R. மேகலா (கணக்கு உதவியாளர்), திருமதி. M. தனலட்சுமி (அலுவலக உதவியாளர்) அவர்களுடன் திரு. R. சேகர் மாநில இணைச் செயலாளர் (சிறப்பு நிலை முகவர்) சேலம் வட்டம் மற்றும் திரு. புகழேந்தி மாநில இணைச் செயலாளர் (இளநிலைப் பொறியாளர் IIம் நிலை) ஆகியோர் ஒன்றிணைந்து சேலம் மின்திட்டத்தில் பணிபுரியும் பெண் பணியாளர்களை சந்திக்க இணைந்தோம்.

பயணத்தின் ஆரம்பமாக சேலம் மின்திட்டத்தின் தெற்கு கோட்டத்தில் பணிபுரியும் தொழில்நுட்பம், நிர்வாகம் மற்றும் வருவாய் பிரிவு ஆகிய பிரிவுகளில் பணிபுரியும் பெண் நிர்வாகிகளை சந்தித்து எங்களை தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் அமைப்பின் பெண் நிர்வாகிகள் என்று அறிமுகம் செய்து கொண்டு, தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் அமைப்பில் பெண்களுக்கென்று தனியாக whatsapp குழு ஒன்று உள்ளது. அக்குழுவில் பெண்கள் தங்களின் கருத்துகளையும், பிரச்சனைகளையும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதோடு தங்கள் வட்டங்களில் நடைபெறும் நிகழ்வுகளையும் பகிர்ந்து கொள்கிறோம் என்றும் பெண் நிர்வாகிகள் சுதந்திரமாகவும், தனித்துவமாகவும் செயல்படுகிறோம் என்று எடுத்துக் கூறினோம் பெண் பணியளர்களும் ஆர்வத்தோடு மிக கூர்மையாக கருத்துக்களை கவனித்தனர் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. பெண் பணியாளர்களிடையே மிகுந்த நல்ல வரவேற்பும் ஆதரவும் இருந்தது.

அதற்கடுத்து சேலம் மின்திட்டத்தின் மேற்கு கோட்டத்தின் செயற்பொறியாளர் திரு. ஆர். ராஜவேலு அவர்களை சந்தித்து நமது அமைப்பின் நியூஸ் புத்தகம் வழங்கி எங்களை அறிமுகம் செய்து கொண்டு, பெண் பணியாளர்களை சந்திக்க வந்துள்ளதாக தெரிவித்து பின் நிர்வாகம் மற்றும் தொழில்நுட்ப பிரிவில் பணிபுரியும் பெண் பணியாளர்களை சந்திக்க சென்றோம். அங்கும் நல்ல வரவேற்பு இருந்தது.

### உணவு இடைவேளைக்குப் பிறகு...

சேலம் மின்திட்டத்தின் நகரம் கோட்டத்திற்கு சென்றோம். அங்கு முதலில் நிர்வாக மேற்பார்வையாளர் அவர்களை சந்தித்தோம். மிக்க மகிழ்ச்சி புன்னகையோடு எங்களை வரவேற்றார்கள். பின்னர் திருமதி. C. சுந்தரி, செயற்பொறியாளர் மற்றும் திருமதி. பத்மபிரியா, உதவி செயற்பொறியாளர் அவர்களையும் சந்தித்து நமது தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் அமைப்பின் நியூஸ் புத்தகம் மற்றும் பெண் நிர்வாகிகளின் புகைப்படங்கள் அடங்கிய துண்டு பிரசுரம் வழங்கினோம். நாங்கள் சொல்வதை பொறுமையாக கேட்டறிந்ததோடு பெண் நிர்வாகிகள் இவ்வளவு தூரம் இதற்காக இவ்வளவு தூரம் வந்துள்ளீர்களா நல்லது என்றும் தங்களின் பணி சிறக்க வாழ்த்துக்கள் என்றும் கூறி சிறப்பித்தார்கள்.

அடுத்து மேற்பார்வைப் பொறியாளர், சேலம் மின் பகிர்மான வட்டம் சேலம் அவர்களை சந்திக்க சென்ற போது மேற்பார்வை பொறியாளர் அவர்கள் நமது தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் அமைப்பின் பொறுப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகளை புன்னகையோடு வரவேற்று அமரச் செய்தார்கள். ஏதாவது Grievance உள்ளதா என்று விசாரித்தார்கள். அதன் அடிப்படையில் நாங்கள் மேற்கு கோட்டத்திற்கு சென்று போது, வருவாய் பிரிவில் பணியாற்றும்

பெண் பணியாளர்கள் தாங்கள் பணிபுரியும் இடத்தில் சரியான காற்றோட்டம், மின் விசிறிகள் சரியாக இயங்காத நிலையில் பழுதாகி உள்ளதால், கொசுத் தொல்லை அதிகமாக உள்ளது. அதனால் நோய் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், சிரமமாகவும் உள்ளதென்றும் புகார் தெரிவித்ததை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களிடம் தெரிவித்தபோது, மேற்பார்வை பொறியாளர் அவர்கள் தனது குறிப்பேட்டில் எழுதிக் கொண்டு, தக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்ததோடு தான் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் பணியேற்பு செய்த முதல் வாரத்தில் சேலம் மேற்கு கோட்ட அலுவலகம் சென்று மேற்பார்வையிட்டேன் அங்கு மழைக்காலங்களில் மழை நீர் அலுவலகத்திற்குள் புகுவதாகவும் மேற்கூரை சேதமடைந்துள்ளதாகவும், அதனையும் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் மாற்று அலுவலகம் ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் அவரே தெரிவித்தார்கள்.

மேலும் பெண்களுக்கான கழிப்பறை ஒன்று தான் உள்ளதென்றும் மூன்று அல்லது நான்கு கழிடிப்பறை வேண்டி தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் அமைப்பின் சார்பாக ஏற்கனவே கடிதம் அளிக்கப்பட்டுள்ளது. அதற்கான Proposal தயார் செய்யப்பட்டு தலைமைப் பொறியாளர், பகிர்மானம், ஈரோடு மண்டலம் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் கூடுதல் தகவலாக தெரிவித்தார்கள்.

மேற்பார்வைப் பொறியாளர் அவர்களிடம் எங்களை திரு. R. சேகர் மாநில இணைச் செயலாளருமான சேலம் மின்திட்ட செயலாளர் அவர்கள் எங்களையெல்லாம் தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் அமைப்பின் பெண் நிர்வாகிகள் என்று ஒருவர் பின் ஒருவராக அறிமுகம் செய்து வைத்தார்கள். பின்பு மகளிருக்கென்று தனியாக மகளிர்குழு (Women's wing Whatsapp group) ஒன்று உள்ளது. பெண்களுக்கென்று ஒரு அமைப்பில் பொறுப்பு கொடுத்து எவ்வாறு செயல்பட வைக்கிறார்கள் என்பதை மற்ற பெண் பணியாளர்களிடம் தெரிவிப்பதற்காகவும் மற்ற வட்டங்களிலிருந்து பெண் நிர்வாகிகள் செயல்படுவதை தெரிவிப்பதற்காகவும் எங்களை அறிமுகம் செய்து கொள்வதற்காகவும் நாங்கள் வந்துள்ளோம் என்று மேற்பார்வைப் பொறியாளர் அவர்களிடம் தெரிவித்தோம்.

பின்பு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களின் அனுமதியோடு மத்திய அலுவலகத்தில் ஒவ்வொரு பிரிவிலும் தனித்தனியே பணியாற்றும் பெண் பணியாளர்களை சந்தித்தோம். அவ்வாறு சென்ற போது, நிர்வாகப்பிரிவு பெண் பணியாளர்களிடம் எங்களை அறிமுகம் செய்து கொண்ட பிறகு, தங்களிடம் ஏதாவது புகார் இருப்பின் தயங்காமல் கூறுங்கள் என்று கேட்ட பொழுது, சேலம் மத்திய அலுவலகத்திலிருந்து பேருந்து நிலையம் வரை செல்லும் வழியில் மதுபானக்கடை உள்ளதாகவும், இதனால் மாலை நேரத்தில் அலுவலகம் முடிந்து அவ்வழியே செல்வதற்கு அச்சமாகவும், பாதுகாப்பு இல்லாத நிலையும் உள்ளதாக பெண் பணியாளர்கள் தெரிவித்தனர். புகாரின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, நமது தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டிபோர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் அமைப்பின் சார்பாக மேற்பார்வைப் பொறியாளர் அவர்களுக்கு கடிதம் அளிப்பதெனவும், மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் மூலமாக உயர்திரு. மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட காவல்துறை அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகிய உயர் அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தவும், மதுபான கடையை மாற்று இடத்தில் அமைக்கவும், பெண் பணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை பெண் பணியாளர்களிடம் தெரிவித்தோம்.

அதன் பிறகு கிழக்கு கோட்டத்தில் பணிபுரியும் நிர்வாகம் மற்றும் தொழில்நுட்பத்தில் பணிபுரியும் பெண் பணியாளர்களிடையே நமது தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ்

பெடரேசன் அமைப்பு பற்றியும் பெண் நிர்வாகிகளின் செயல்பாடுகள் குறித்தும் சிறப்பான முறையில் திருமதி. B. இந்து அவர்கள் எடுத்துக் கூறினார்கள். பின்பு கிழக்கு கோட்ட வருவாய்ப் பிரிவு பெண் பணியாளர்களை சந்திக்க சென்று அவர்களிடையே துண்டு பிரசுரம் மற்றும் நமது தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் நியூஸ் புத்தகம் வழங்கப்பட்டு நமது சங்க செயல்பாடுகள் குறித்த விசயங்களை திருமதி. பாரதி மாநில மகளிரணி யெலாளர் அவர்கள் எடுத்துரைத்தபோது, அனைவரும் கூர்ந்து கவனித்தார்கள்.

மேலும் அவர்களும் ஒரு புகாரை நம்மிடையே முன் வைத்தார்கள். அலுவலக நேரம் முடிந்து இருசக்கர வாகனத்தில் செல்பவர்கள் அலுவலக நுழைவுவாயிலின் வழியாக செல்லும் போது, நுழைவுவாயிலின் இருபுறமும் கனரக வாகனங்கள் நின்றுக் கொண்டிருப்பதால், ரோட்டின் மறுபுறம் செல்லவும் ரோட்டினை கடந்து செல்வதும் மிகவும் சிரமமாக உள்ளதாகவும், இதனால் விபத்து ஏற்பட வாய்ப்புள்ளதாக புகார் தெரிவித்தார்கள். அதனையும் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களிடம் தெரிவித்து சரி செய்வதற்கு அதற்கான ஏற்பாடுகள் செய்து தர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பெண் பணியாளர்களிடையே உறுதி கூறினோம்.

இறுதியாக சேலம் மின் திட்டத்தில் பெண் பணியாளர்களை சந்தித்த நிகழ்வு முடிவுற்ற பிறகு, நமது தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் அமைப்பின் பொதுச்செயலாளர் அவர்கள் பெண் நிர்வாகிகளை கவுரப்படுத்தும்விதமாக நிகழ்வில் பங்கேற்ற பெண் நிர்வாகிகள் அனைவருக்கும் பூக்கூடையும், தனித்தனியே மலர்கொத்து வழங்கியும் சிறப்பித்தார்கள். இந்நிகழ்வு நமது அமைப்பில் உள்ள பெ ண் நிர்வாகிகளே அனைவரையும் கௌரவப்படுத்தும்விதமாக இருந்தது. மேலும் நமது தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் அமைப்பானது ஒரு நல்ல தலைமைப் பண்பு உள்ள நிர்வாகிகளை தலைமையாக கொண்டுள்ளோம் என்பதில் நாம் பெருமை கொள்கிறோம். இந்நிகழ்வில் மாநில பொருளாளர், மாநில செயல் தலைவர் மற்றும் இதர மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்தியதுகூடுதல் சிறப்பாக அமைந்தது.

சேலம் மின் திட்டத்தில் உள்ள நகரம் கோட்டம், கிழக்கு கோட்டம், மேற்கு கோட்டம், தெற்கு கோட்டம் மற்றும் மத்திய அலுவலகம் ஆகிய இடங்களில் பணிபுரியும் பெண் பணியாளர்களை சந்தித்து எங்களை அறிமுகம் செய்து கொண்டு, நமது தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் அமைப்பு பற்றியும் அமைப்பில் பெண்களின் பங்களிப்பு பற்றியும் எடுத்துரைத்த நிகழ்வு மிக்க மகிழ்ச்சியை எங்களுக்கு ஏற்படுத்தியது. மேலும், அனைத்து பெண் பணியாளர்களும் மிக்க ஆர்வத்துடன் நாங்கள் எடுத்துக் கூறியவற்றை பொறுமையாக கேட்டறிந்தனர்.

இந்நிகழ்வு மனதிற்கு மிகவும் நெகிழ்ச்சியையும், மன நிறைவையும் ஏற்படுத்தியது. மேலும் பெண் நிர்வாகிகள் எங்கள் அனைவருக்கும் தொடர்ந்து பயணிக்க தூண்டியதோடு, ஒரு புதிய உத்வேகத்தையும் அளிக்கிறது. இதே உத்வேகத்தோடு நாங்கள் தொடர்ந்து செயல்படுவோம் என்று நமது அமைப்பு சார்ந்த பெண் நிர்வாகிகள் அனைவர் சார்பாகவும் உறுதியளிக்கிறோம். மேலும் இந்த வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்த தலைவர், பொதுச்செயலாளர் மற்றும் பொருளாளர் அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

**அடுத்த எங்களது பயணம் கோபி மின் பகிர்மான வட்டம்**

***எங்களது அடுத்த பயணம் தொடரும்...***

# பெரியார் மண்ணில் ஒரு பயணம்



**V. சிவராணி**
மாநில இணைச் செயலாளர்
மகளிரணி

**த**மிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் அமைப்பு சார்ந்த மகளிர் அணியின் சார்பாக தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களை சந்தித்து மகளிர் அமைப்பு பற்றியும் மகளிர் குழுப் பற்றியும் எடுத்துரைக்க வேண்டிய ஒரு குழுவாக செல்வதென்று முடிவு செய்யப்பட்டு தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் அமைப்பின் தலைவர், பொதுச்செயலாளர் மற்றும் பொருளாளர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி ஏற்கனவே கடந்த திண்டுக்கல் மற்றும் திருப்பூர் மின் பகிர்மான வட்டங்களில் பெண் தொழிலாளர்களை சந்தித்த தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் அமைப்பு சார்ந்த மகளிர் அணியினருடன் பெரியார் மண்ணில் ஒன்றிணைந்தோம்.

குழுவில் திருமதி. பாரதி, மாநில மகளிரணி செயலாளர், கோவை (தெற்கு) தலைமை அலுவலகம், திருமதி. கவிதா, மாநில மகளிரணி இணைச்செயலாளர், (கோவை மெட்ரோ), திருமதி. யோகசித்ரா, (கோவை வடக்கு) மாநிடில மகளிரணி இணைச்செயலாளர், திருமதி. வ. சிவராணி, (சேலம்) மாநில மகளிரணி இணைச்செயலாளர் அவர்களுடன் திரு. காமராஜ், கோவை மாநகர் வட்ட பொருளாளர், திரு. நந்தகுமார், ஈரோடு திட்ட செயலாளர் ஆகியோர் இணைந்தோம்.

ஈரோடு தலைமை அலுவலகம் மற்றும் ஈரோடு மின் பகிர்மான வட்டத்தில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களை சந்தித்து தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் சங்கத்தில்

உள்ள மகளிர் அமைப்பு பற்றியும் மகளிர் குழுவின் (Whatsapp Group) செயல்பாடுகள் குறித்தும் மகளிர் அமைப்பில் உள்ள ஒவ்வொரு உறுப்பினர்களும் தனித்துவமாக செயல்படுவது பற்றியும் எடுத்துரைக்க முதலில் ஈரோடு தலைமை அலுவலக நிர்வாகப்பிரிவு பெண் பணியாளர்களை சந்தித்தோம். நல்ல வரவேற்பு இருந்தது. பின்பு ஈரோடு மின் பகிர்மான வட்டம் மேற்பார்வைப் பொறியாளர் திருமதி. இந்திராணி மேடம் அவர்களை தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் அமைப்பு சார்ந்த மகளிர் நிர்வாகிகள் சந்தித்து சங்கம் சார்பாக பொன்னாடை அணிவிக்கப்பட்டது. பிறகு நாங்கள் தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் அமைப்பின் மகளிர் நிர்வாகிகள் என்றும் மகளிர் அமைப்பு பற்றியும் எங்களை அறிமுகம் செய்து கொள்வதற்காகவும் வந்துள்ளோம் என்று எடுத்துரைத்தோம். தங்களின் பணி சிறக்க வாழ்த்துக்கள் என்று மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் எங்களை வாழ்த்தி அனுப்பி வைத்தார்கள்.

பிறகு முதலில் தலைமை அலுவலக நிர்வாகப்பிரிவு பெண் தொழிலாளர்களை சந்தித்தோம். நல்ல வரவேற்பு இருந்தது. அடுத்தடுத்து ஒவ்வொரு பிரிவில் உள்ள (Administration Section, Technical Sction, Revenue Section) உயர் அலுவலரிடம் சென்று அவர்களிடம் அனுமதி பெற்று பிறகு, பெண் தொழிலாளர்களை சந்தித்து தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் அமைப்பின் மகளிர் நிர்வாகிகளின் செயல்பாடுகள் குறித்தும் மகளிருக்கான குழு ஒன்று உள்ளது பற்றியும் அக்குழுவில் தலைவர், பொதுச்செயலாளர் மற்றும் பொருளாளர் அவர்கள் உள்ளர் என்றும் மாதத்திற்கு ஒருமுறை அல்லது இருமுறையோ மகளிர் குழுவில் இணையம் வாயிலாக (Zoom Meeting) கூட்டம் நடைபெறும் என்றும் எடுத்துரைத்தோம். அக்கூட்டத்தில் மகளிர் பணி செய்யும் இடத்தில் உள்ள இடர்பாடுகள் குறித்தும் சந்தேகங்கள் குறித்தும் தலைமை அலுவலக நிகழ்வுகள் குறித்தும் சங்கம் சார்ந்த பொது நிகழ்வுகள் குறித்தும் ஒருவருக்கொருவர் கலந்துரையாடுவோம் என்று பெண் தொழிலாளர்களை சந்தித்து எடுத்துரைத்தோம். நல்ல மிகவும் வரவேற்பு இருந்தது. மேலும் பெண் தொழிலாளர்கள் ஆர்வமாக எங்களிடம் மகளிர் குழுப்பற்றி (Whatsapp) விசாரித்தார்கள்.

இறுதியாக ஈரோட்டில் பெண் பிரதிநிதிகள் மட்டுமே உள்ள நிலையில் பெண் நிர்வாகி யாரும் இல்லாத காரணத்தினால் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று எண்ணினோம். அதன் அடிப்படையில் ஈரோடு திட்ட செயலாளர் திரு. நந்தகுமார் அவர்களின் பரிந்துரையின்படி திருமதி. வித்யாஸ்ரீ, இளநிலை உதவியாளர் (கணக்கு) அவர்களை தேர்ந்தெடுத்தோம். அவர்களை அழைத்து தமிழ்நாடு எலக்ட்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் அமைப்பின் ஈரோடு மின் திட்டத்தின் வட்ட மகளிரணி நிர்வாகியாக தங்களை தேர்ந்தெடுத்துள்ளோம். தங்களுக்கு சம்மந்தமா என்று அவர்களின் கருத்து கேட்டறிந்தோம். திருமதி. வித்யாஸ்ரீ அவர்களம் ஒப்புக்கொண்டு சங்கப்பணிகளை மேற்கொள்வதாக சுய விருப்பத்துடன் ஒப்புக்கொண்டார்கள். திருமதி. வித்யாஸ்ரீ அவர்கள் சிறந்த முறையில் சங்கப்பணிகளைய செவ்வனே செய்வதற்கு மனமார்ந்த வாழ்த்துக்கள் தெரிவித்து பெரியார் மண்ணிலிருந்து விடைப்பெற்றோம்.

மேலும் பெரியார் மண்ணில் மேற்கொண்ட பயணத்தில் பெண்களின் ஆதரவும் விசாரணையும் எங்களை தொடர்ந்து பயணிக்க தூண்டியது. இந்த வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்த தலைவர் பொதுச்செயலாளர் மற்றும் பொருளாளர் அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றி.

**V. சிவராணி**
மாநில இணைச்செயலாளர்
மகளிரணி

# தலைமைப் பண்பு



**ப. நாகராஜன்**
மாநில இணை செயலாளர் (தொழில் நுட்பம்)

**த**லைமை பண்பு என்பது உங்கள் பதவி பற்றியது அல்ல. அது நீங்கள் இருக்கும் முறை சுருக்கமாக சொன்னால், பதவி பெயர் இல்லாமல் நீங்கள் தலைவராக இருக்க முடியும்.

தலைமை பண்பு எந்த ஒரு விஷயத்திற்கும் சொந்தமாக பொறுப்பெடுத்துக் கொள்வது, உங்களை சுற்றி உள்ள வட்டத்தில் மேம்பட்டவராக இருப்பது, சிறந்த உறவுகளை உருவாக்கி கொள்வது மற்றும் முன்மாதிரியால் மற்றவர்களை மேம்படுத்துவது.

நீங்கள் எந்த ஒரு சின்ன சின்ன விஷயங்களை எப்படி செய்கிறீர்கள் என்பதை கொண்டு, நீங்கள் பெரிய விஷயங்களை எப்படி செய்வீர்கள் என்பதை கண்டு உணர முடியும்.

உங்களுடைய சின்ன விஷயங்களில் சராசரியாக இருப்பதை ஏற்றுக்கொள்வது, முக்கிய விஷயங்களிலும் உங்களை சராசரியாக இருக்கும்படி ஆக்கி விடுகிறது.

உங்களுடைய வீடும், வீட்டின் வெளிப்புறமும் நன்கு பராமரிக்கப்பட்டதாக இருந்தால், உங்கள் வாழ்க்கையும் நன்கு அமைந்திருக்கும் என்று உறுதியாக கூற முடியும்.

உங்களுடைய நண்பர்களின் பிறந்த நாளுக்கான வாழ்த்துகள் மற்றும் ஒவ்வொரு மீட்டிங்கிற்கு பிறகும் நன்றிக் கடிதங்கள் அனுப்புவது போன்ற சிறிய விஷயங்களிலும் நீங்கள் கவனத்துடன் இருந்தீர்களானால் உங்களுடைய முக்கிய திட்டங்களிலும், பெரும் வாய்ப்புகளிலும், நீங்கள் கவனத்துடன் இருப்பீர்கள் என்பது திண்ணம்.

நீங்கள் பணிபுரியும் இடம் ஒழுங்குடன் இருந்தால் உங்கள் வாடிக்கையாளர்களிடம் உங்களுக்குள் உயர்வான பொறுப்பின் பிரதிபலிப்பாக அது அமையும்.

ஒருவருடைய குளியலறையின் சுத்தத்தின் அடிப்படையில் அவர்களுடைய வியாபாரத்தை பற்றி ஏராளமாக சொல்ல முடியும். ஒரு மாசற்ற குளியலறை நீங்கள் அக்கறையுடையவர்கள் என்று உரக்க சொல்கிறது.

ஆகையால் எந்த விஷயத்திற்கும் முழுமையான கவனம் செலுத்துங்கள் சின்னஞ்சிறிய விஷயங்களில் கூட பெறு கவனம் செலுத்துங்கள். ஆகையால் முழு கவனத்திற்கு பொறுப்பெடுத்துக் கொள்ளுங்கள்.

**நாளைய தலைவன் நீயே!...**

# ஒரு சிரிப்பின் மகிமை



**இந்து ராஜேஷ்குமார்**
நிர்வாக உதவியாளர்,
தலைமைப் பொறியாளர் அலுவலகம்/பகிர்மானம்
கோவை மண்டலம்

